


31ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 31 பாலம்: 08 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் APRIL 15, 2021

# எடின்பரோ கோமகன் இயற்கை எய்தினார்

இங்கிலாந்து இராணி இரண்டாம் எலிசபெத்தின் (Queen Elizabeth II) கணவரும் எடின்பரோ கோமகனுமாகிய இளவரசர் பிலிப் (Prince Philip, Duke of Edinburgh) தனது 99ஆவது வயதில் வின்ஸர் அரண்மனையில் (Windsor Castle) 2021 ஏப்ரல் 9இல் காலமானார்.

இளவரசர் பிலிப்பினுடைய இறுதிச்சடங்கு வின்ஸர் அரண்மனையில் உள்ள St. George's Chapelஇல் ஏப்ரல் 17 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு (இங்கிலாந்து நேரம்) நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 17ஆம் திகதிவரை இங்கிலாந்தில் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இங்கிலாந்தில் உள்ள எல்லா அரச நிறுவனங்களிலும் இங்கிலாந்தின் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. இராணி வதியும் இடத்தைத் தவிர ஏனைய இராணிக்குச் சொந்தமான கட்டிடங்களிலும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது. இராணி இருக்கும் கட்டிடத்தில் தேசியக்கொடி எப்பொழுதும் முழுக்கம்பத்தில் பறக்க வேண்டும் என்பது அரச விதி முறை.

இங்கிலாந்தில் தற்போது பரவிவரும் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக இறுதிக் கிரிகைகளின் போது தேவாலயத்தில் 30 பேருக்கு மேல் பங்குபற்றக் கூடாது. இதனால் இறுதிக்கிரியை நிகழ்வுகள் யாவும் பொதுமக்கள் பார்வைக்காக ஒளிபரப்பப்பட உள்ளது.

கோவிட்-19 தொற்றுநோய் பரவல் காரணமாக பொதுமக்களை இளவரசர் பிலிப்பின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொள்ள வேண்டாம் எனவும், கட்டிடங்கள் முன்னால் பூக்கொத்துக்களை வைக்க வேண்டாம் எனவும் அரச குடும்பத்தின் சார்பில் கேட்கப்பட்டுள்ளது. இளவரசர் பிலிப்பிற்கு இறுதி மரியாதை செலுத்துவதற்குப் பூக்கொத்துக்களை வைப்பதற்குப் பதிலாக ஒரு தொண்டு நிறுவனத்திற்கு (charity) பண உதவி வழங்குமாறு அரச குடும்பம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச குடும்பத்திற்குரிய இணையதளத்தில் பொதுமக்கள் தமது அஞ்சலிகளைப் பதிவிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் பொதுமக்கள் வின்ஸர் அரண்மனைக்கு வெளியில் பூக்கொத்துக்களை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கின்றனர். St.George's Chapelஇல் ஏப்பிரல்


Prince Philip in 1981

17இல் இறுதி மரியாதையின் பின்னர் இளவரசர் பிலிப்பின் பூதவுடல் அங்குள்ள பிரத்தியேக இடத்தில் அடக்கம் செய்யப்படும். இங்குதான் ராணி இரண்டாம் எலிசபெத்தின் பெற்றோரும் அடக்கம் செய்யப்பட்டனர். ஆனால் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட பகுதி King George VI நினைவுத் தேவாலயம் என அழைக்கப்படுகிறது. இளவரசர் பிலிப்பின் மறைவையொட்டி இங்கிலாந்தில் பல்வேறு இடங்களில் 41 தரம் பீரங்கி முழங்கி இராணுவ அஞ்சலி ஏப்ரல் 10இல் செலுத்தப்பட்டது.

1947 நவம்பர் 20இல் எலிசபெத்தைத் திருமணம் செய்த பிலிப் கடந்த 73 வருடங்களாக அவரின் எல்லாவிதமான முயற்சிகளுக்கும் உறுதுணையாகவும் பக்கபலமாகவும் இருந்து வந்தார். இராணி எலிசபெத் தனது திருமணத்தின் 50ஆவது ஆண்டு நிகழ்வில் 1997இல் இதை வெளிப்படையாகவே கூறினார். "அவர் மிகவும் எளிமையானவர். எனது பலமாகவே இதுவரை காலமும் இருந்து வருகிறார். அவருக்கு நானும், எனது குடும்பமும், இந்த நாடும் மற்றும் பல நாடுகளும் எங்களால் அளவிட முடியாத அளவிற்குக் கடமைப்பட்டுள்ளோம்" என்று அன்று அவர் கூறியதைப் பல ஊடகங்கள் தற்போது சுட்டிக்காட்டி நினைவு கூர்ந்துள்ளன.

தந்தையின் மறைவையொட்டி அவரது மூத்த மைந்தன் இளவர்சர் சார்ள்ஸ் விடுத்த அறிக்கையில் "எனது குடும்பமும், நானும் எனது தந்தையை இழந்து நிற்கிறோம். அவர் எங்களால் மிகவும் நேசிக்கப்பட்ட மற்றும் மதிக்கப்பட்டவராக இருந்து வந்தார். எங்களுடைய மனதை மட்டுமல்ல இங்குள்ள பல மக்களின் மனதையும் உலகெங்கும் உள்ள பொது நலவாய நாடுகளின் மக்களின் மனதையும் அவர் கவர்ந்தவர். அவர்களும் எனது தந்தையின் இழப்பில் ஏற்பட்ட துன்பத்தை எம்முடன் சேர்ந்து பகிர்ந்து கொள்வர் என நான் நம்புகிறேன்" என்றார்.

இங்கிலாந்தின் பிரதமர் Boris Johnson விடுத்த அறிக்கையில் "இளவரசர் பிலிப் அரசு குடும்பத்தையும் முடியாட்சியையும் (monarchy) பக்கபலமாக நின்று வழி நடத்தியவர். எமது நாட்டின் தேசிய வாழ்க்கைக்குப் பக்கபலமாக இருந்தவர்" என்றார். இளவரசர் பிலிப்பின் இறுதிநாள் நிகழ்வில் கோவிட்-19 தொற்றுநோய்த் தடுப்பு விதிகளால் Boris Johnson நேரடியாகப் பங்குபற்ற மாட்டார்.

கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ வெளியிட்டுள்ள அறிக்கையில் "இளவரசர்

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# காசி நகரத்தின் முக்கியமான ஆலயங்ளும் அதன் சிறப்புகளும்



செல்வராஜ், டெல்லி
www.tamilcartrip.com
WhatsApp: +91.986.816.5715

காசியில் விஸ்வநாதரை தரிசித்த பின்பு, சிறிய ரக வாகனம் மூலம் சென்று முக்கியமாக தரிசிக்க வேண்டிய ஆலயங்களைப் பற்றிய விபரங்களைக் காணலாம்.

கௌடி மாதா என்னும் சோழி அம்மன் கோயில் : சிவபெருமானின் சகோதரியாக வும் காசியின் தேவதையாகவும் கருதப் படும் சோழி அம்மனை வணங்கி வந்தால் மட்டுமே காசி யாத்திரை பூர்த்தி ஆகும் என்பது ஐதீகம். கோயிலுக்கு அருகில் உள்ள கடைகளில் கிடைக்கும் சோழி களை வாங்கி சோழி அம்மன் பாதத்தில் வைத்து தரிசித்த பின்பு 'காசியின் பலன் எங்களுக்கு - சோழி பலன் உங்களுக்கு" என்று சொல்லி சில சோழிகளை பிரசாதமாக எடுத்து வருவது வழக்கம்.

சங்கட் மோசன் ஹனுமான் ஆலயம் : இவர் தன்னை வணங்கும் பக்தர்களின் சங்கடங்கள் எல்லாம் தீர்த்து வைக்கும் சக்தி கொண்டவர் என்பதால் இவரை சங்கட் மோசன் ஹனுமான் என்று அழைக்கப்படுகின்றார். இந்த ஆலயத்தின் வளாகத்தில் ராமர்-சீதைக்கும் தனிபட்ட ஆலயம் அமைந்துள்ளது. கோயில் வளாகத்தில் கடலைமாவு மற்றும் நாட்டு நெய் கொண்டு செய்யப்பட்ட லட்டு பிரசாதமாக கிடைக்கின்றது.




புதிய காசி விஸ்வநாதர் ஆலயம் : 1966ஆம் ஆண்டு பிர்லா குடும்பத்தின ரால் முழுவதும் சலவைக்கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஆலயம் சிவபெரு மானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தாகும். பனாரஸ் இந்து பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே அமைந்துள்ள இந்த ஆலயம் காசி விஸ்வநாதரின் ஆலயத்தைப் போன்றே நவீன வடிவத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கோயில் இந்தியாவின் மிக உயரமான (77 மீற்றர்) கோவில்களில் ஒன்றாகக் கருதப்படுகின் றது. ஆலயத்தின் தரை தளத்தில் சிவலிங்கமும் - நந்தியும் மற்றும் முதல் தளத்தில் லட்சுமி-நாராயணனுக்கும் மற்றும் துர்க்கா தேவிக்கும் தனித்தனி சந்நதி உள்ளன. பகவத்கீதை மற்றும் இந்து மத நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட போதனைகள் ஆலயத்தின் பளிங்கு சுவர்களில் விளக்கப் படங்களு டன் பொறிக்கப்பட்டுள்ளன.

காசி மன்னர் அரண்மனை : கங்கை நதிக் கரையின் தெற்கு புறம் ராம் நகர் என்னும் இடத்தில் 1750ஆம் ஆண்டில் வாரணாசி மன்னர் ராஜா பல்வந்த் சிங்கினால் உருவாக்கப்பட்டதாகும். தற்சமயம், அரண் மனையின் ஒரு பகுதி ராஜாவின் வம்ச வழியில் வந்த மகாராஜா ஆனந்த் நாராய ணனின் வாழ்விடமாகவும் மற்றொரு பகுதி பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



இங்குள்ள அருங்காட்சியத்தில் மன்னர் பயன்படுத்திய விலை உயர்ந்த ஆடை கள், தங்க ஆபரணங்கள், பல்லக்குகள், பழையகாலத்து அமெரிக்க வாகனங்கள் மற்றும் அரிதான வானியல் கடிகாரம் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள சரஸ்வதி பவன் என்னும் நூலகத்தில் துளசிதாசர் எழுதிய அரிய ஓலைச் சுவடிகள் உட்படப் பல பழைய நூல்கள் பாதுகாக்கப்படுகின்றன.



வியாசர் காசி : வேதாந்த சூத்திரங்களின் தொகுப்பாளராகவும், மகாபாரத காவியத்தை இயற்றியவராகவும் மற்றும் விஷ்ணுவின் கால அவதாரமாவும் கருதப்படும் வியாச முனிவரால் ஸ்தாபித்த சிவலிங்கத்தைக் கண்டிப்பாகத் தரிசிக்க வேண்டும். இந்த ஆலயம் காசி மன்னர் அரண்மனைக்கு அருகில் அமைந்துள்ளது.

காசி ஆலயங்கள் தொடரும். . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாடசாலைகளின் எழுச்சியும், மாகாணப் பாடசாலைகளின் வீழ்ச்சியும்




2019ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி, இலங்கையில் உள்ள 10,165 அரச பாடசாலைகளில் சுமார் 374 தேசிய பாடசாலைகளும், (National Schools) ஏனைய 9,792 மாகாணப் பாடசாலைகளும் (Provincial Schools) இயங்குநிலையில் உள்ளன. தேசியப் பாடசாலைகளின் பரிபாலனம் மத்திய அரசாங்கத்தினாலும், மாகாணப் பாடசாலைகள் அந்தந்த மாகாண அரசாலும் நிர்வகிக்கப்படுகின்றது.

தேசியப் பாடசாலைகளுக்கும், மாகாண பாடசாலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளாக இருப்பது, வெறும் பெயர்ப் பலகையே (Name Boards) அன்றி வேறொன்றுமில்லை. மத்திய அரசினால் தேசியப் பாடசாலைகளாகச் சுவீகரிக்கப் பட்ட மாகாணப் பாடசாலைகளின் முகப்பில் அழகாகப் பெரிய எழுத்தில், தமது பாடசாலையின் பெயரை எழுதி, அதற்குக் கீழாக "தேசியப் பாடசாலை" என்றும் எழுதப்பட்டிருப்பதே இரண்டுக்கும் இடையிலான வேறுபாடாகும். அதேவேளை தேசிய பாடசாலைகளின், அதிபர்களாக இருப்பதை ஒரு கௌரவமாகவும், பெருமையாகவும் நினைத்துக் கொள்வதாலேயே பெரும்பாலான பாடசாலைகள் அதிபர்களின் அழுத்தங்கள் காரணமாகத் தேசியப் பாடசாலைகளாக மாற்றப்படுகின்றன. இது உண்மையில் ஒரு பெயர்ப் பலகையே ஒழிய பாடசாலையின் தரம் உயர்த்தப்படுவது என்பது இல்லை. ஏனைய 1AB மற்றும் 1C தரத்திலான மாகாணப் பாடசாலைகள் போன்றே இவையும் சமமான தரத்தைக் கொண்டுள்ளன.

அந்த வகையிலேயே 1987ஆம் ஆண்டு மாகாண சபைகளின் அதிகாரப் பரவலாக்கல் கொள்கையின் ஒரு பகுதியாகவே மாகாணப் பாடசாலைகளில் சில தேசியப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. ஆயினும் மாகாண சபைகள் அமைப்பு அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னரேயே 1985ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் தேசியப் பாடசாலைகளை உருவாக்குவதற்கான முன்னாயத்தங்களைச் செய்திருந்தது. அப்பொழுது, இதற்காக இலங்கை யில் சிறந்த பாடசாலைகளாக இனங் காணப்பட்ட 18 பாடசாலைகள், மட்டுமே தெரிவு செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, மத்திய அரசின் பாடசாலை வகைப்படுத்தல் கொள்கையின் படி, 1990ஆம் ஆண்டு ஏதேனும் ஒரு பாடசாலை தேசிய பாடசாலையாகப் பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கு அல்லது தேசிய பாடசாலையாக ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலையாயின் தொடர்ந்தும் தேசியப் பாடசாலையாகவே பேணுவதற்கு அவை பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கமைய,

1. மாணவர் தொகையானது ஆகக் குறைந்தது 2000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்டிருப்பதுடன், இதில், ஆரம்பப் பிரிவில் (தரம்1-5) குறைந்தது ஆயிரம் மாணவர்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.



2. ஒரு வகுப்பில் மாணவர் வரவுப் பதிவேட்டின்படி, குறைந்தது 30 மாணவர்களாவது, இருத்தல்.

3. மாநகரசபை, நகரசபைகளின் எல்லைக்குட்பட்ட பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பு விஞ்ஞானப் பிரிவில் 100 மாணவர்களையோ அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களையோ கொண்டிருக்கும் அதே வேளையில் ஏனைய பிரதேசங்களில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்க வேண்டும்.

4. க.பொ.த. உயர்தரத்தில் கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. தேசியப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்படும் பாடசாலையில், தொழில்நுட்பப் பாடங்களில் தெரிவு செய்வதற்காக விதந்துரைக்கப்பட்ட பாடத்தொகுதிகளில் எவையேனும் நான்கு பாடங்களையாவது கற்பிப்பதற்கான வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். உதாரணமாக விவசாய விஞ்ஞானம், மரவேலை, வர்த்தகமும் கணக்கியலும், மோட்டார் இலத்திரனியல் உட்பட்ட தொழில் நுட்பப் பாடங்களில் எவையாவது நான்கு பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்கள், ஆய்வு கூடங்கள், உபகரணங்கள் போன்ற வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. குறித்த பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கும் போதியளவிலான விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இருத்தல் வேண்டும்.

7. கடந்த மூன்றாண்டுகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், ஒவ்வொரு வருடமும், தோற்றிய பாடங்களில் குறைந்தது 40% மாணவர்களாவது, சித்தி பெற்றிருப்பதுடன், கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

8. பொதுவாக தேசிய பாடசாலைகளாகத் தெரிவுசெய்யப்படும் பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குட்பட்ட ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க இப்பாடசாலை பிரபல்யம் மிக்கதாகவும், பொதுமக்களினால் விரும்பப்படும் பாடசாலையாகவும் இருப்பதுடன் சமூகத்தில் எல்லாத் துறைகளிலும் பெயர் பெற்ற ஒரு பாடசாலையாகவும் இருப்பது அவசியமானது. இதில் விளைதிறன்மிக்க (Effectiveness) பாடசாலைக்குரிய பின்வரும் குறிகாட்டிகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

6.1. பாடசாலையில் பேணப்படும் ஒழுக்கம்.
6.2. உயர்வான பரீட்சைப் பெறுபேறுகள்
6.3. மாணவர்களின் வரவுவீதம் அதிகரித்துக் காணப்படுதல்.
6.4. மாணவர்களின் இடைவிலகல் குறைவாக இருத்தல்.
6.4. பெற்றோர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினரின் பங்களிப்பு.
6.5 வளங்களின் உச்சப்பயன்பாடும், அவற்றை வினைத்திறனுடன் பயன்படுத்தும் தன்மையும்.
6.6. அதிபர் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகள்.
6.8. பாடங்களில் உள்ளார்ந்த மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் எண்ணிக்யையும் அவற்றில் அப்பாடசாலை அடைந்துள்ள பெறுபேறுகளும்.

9. பாடசாலையின் மாணவர் தொகைக்கேற்ப நிலப்பரப்பு போதுமானதாக இருத்தல். ஏனெனில் பிரதேசத்தின் சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப பாடசாலையை மேலும் விரிவாக்குவதற்குப் போதிய இட வசதிகளைக் கொண்டிருப்பதுடன், கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய வளங்களையும் போதியளவில் கொண்டிருத்தல் வேண்டும்.

10. கடந்த மூன்றாண்டுகளில் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக தூரநோக்குடன் செயற்படும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வினைத்திறன்மிக்க பழைய மாணவர் சங்கம் என்பனவும் இருத்தல் வேண்டும். இங்கு பழைய மாணவர் சங்கம் பாடசாலை நிர்வாகத்தில் தலையிட முடியாவிட்டாலும், பாடசாலைகளின் உட்கட்டமைப்பு மற்றும் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளில் உதவுவதால். அந்த நேரம் பழைய மாணவர் சங்கத்தின் முக்கியத்துவமும், தேவையும் சுட்டிக்காட்டப்பட்டது.


ஆனால் காலப் போக்கில் பழைய மாணவர் சங்கங்களின் சில உறுப்பினர்கள் குறிப்பாக அரசியல் வாதிகள் பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்களாகத் தெரிவு செய்யப் பட்டதைத் தொடர்ந்து, நிர்வாகத்தில் தேவையற்ற தலையீடுகளை ஏற்படுத்தி நிர்வாகத்திற்கும் இடையூறுகளை ஏற்படுத்தி வந்தனர். இதனாலேயே கல்வி அமைச்சு பழைய மாணவர் சங்கங்களின் மீது கட்டுப்பாடுகளைக் ஏற்படுத்தும் வகையில் பழைய மாணவர் சங்கங்களின் கடமைகள் பற்றிய சுற்றறிக்கையை சகல பாடசாலைகளுக்கும், கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்தது. இவை தொடர்பான அறிக்கைகளில், பின்வருவன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பதவி வழியாக அதிபரே இருத்தல் வேண்டும்.
- ஒரு ஆண்டில் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை தொடர்பான அறிக்கை.
- ஒவ்வொரு கூட்டத்திலும் உறுப்பினர்களின் வரவு
- பாடசாலைகளின் கற்றல் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் பழைய மாணவர் சங்கங்களின் ஈடுபாடு தொடர்பான முன்னேற்ற அறிக்கை என்பவற்றுடன், பாடசாலை ஆளணியினரின் எண்ணிக்கை, பணம், உபகரணங்கள், நிதி என்பன அனைத்து மாணவர்களுக்கும் போதுமான அளவில் இருத்தல் தொடர்பான அறிகை.

இவ்வாறான தகைமைகளைக் கொண்டிருக்கும் பாடசாலைகளே முதற்கட்டமாக தேசிய பாடசாலைகளாக உள்வாங்கப் பட்டன. இத்தகைய பிரமாணங்களின் அடிப்படையில் தேசிய பாடசாலைகள் மிகக் குறைவாகவே உருவாக்கப்பட்டதால்,

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் 581

## ஆதன விலை 1960 Vs 2020



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ரொறொன்ரோ (Leslie/ Finch) பகுதியில், 1963இல் பிரசுரிக்கப்பட்ட ஆதனம் விற்பதற்கான விளம்பரம் ஒன்றை அண்மையில் இணையத் தளமொன்றில் பார்க்கக்கூடியதாக இருந்தது. இந்த விளம்பரத்தில் இரண்டு அடுக்கு தனி வீடு $16,745 ஆகவும், வீட்டுடன் சேர்ந்த கார் தரிப்புடன் உள்ள வீடுகள் $19,495 ஆகவும் கார் தரிப்பிடம் இல்லாமல் கார்பெற் (carpet) உடன் உள்ள வீடுகள் $18,275 எனவும், அத்துடன் ஆதனம் வாங்குவோருக்கு அரசாங்க மானியமாக $500 வழங்கப்படும் எனவும் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

இந்த விளம்பரத்தினால் ஏற்பட்ட மன நிலையைக் கொண்டு இந்த ஆக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. 1963இல் ஒரு மணித்தியாலத்திற்குரிய ஆகக் குறைந்த வருமானம் (minumum wage) பெண்களுக்கு 85 சதமாகவும், ஆண்களுக்கு $1.00ஆகவும் நிர்மாணத் தொழில் (construction) புரிபவர்களுக்கு $1.25 ஆகவும் இருந்தது.

இதன்படி 1963இல் ஒருவரின் வருடாந்த சராசரி வருமானம் $2,080 ($1.00x40x52) ஆகும். (ஒரு மணி நேர வருமானம் $1.00 எனவும், கிழமைக்கு 40 மணி நேரம் தொழில் புரிவதாகவும்கொண்டு கணக்கிடப் பட்டது.) மேற்குறிப்பிட்ட விளம்பரத்திலுள்ள வீட்டின் விலை ஒருவரின் வருடாந்த சராசரி வருமானத்தைவிட (16,745÷2,080) அண்ணளவாக 8 மடங்கு அதிகமாகும்.

மேலே குறிப்பிட்ட ஆதனம் ரொறொன்ரோ வின் முக்கிய பகுதியில் அமைந்துள்ள தனி வீடு என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் 1963இல் இரு சேர்ந்த வீடுகள் (semi detached) மற்றும் பலசேர் (attached) வீடுகள், இதைவிட குறைந்த விலையில் விற்கப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட போன்றதொரு வீட்டின் இன்றைய (2021) விலை குறைந்தது $1.1 மில்லியன் என இலகுவாக மதிப்பிடலாம். 2021இல் ஒரு மணித்தியாலத்திற்குரிய ஆகக் குறைந்த வருமானம் (minumum wage) $14.25 ஆகும். இதன்படி தற்போது ஒருவரின் வருடாந்த சராசரி வருமானம் $29,640 ($14.25x40x52) ஆகும். மேற்குறிப்பிட்ட வீட்டின் விலை தற்போது ஒருவரின் வருடாந்த சராசரி வருமானத்தைவிட (1,100,000÷29,640) அண்ணளவாக 37 மடங்கு அதிகமாகும்.




1960களிற்கும் 2020களிற்கும் இடையே பலவித மாற்றங்களைக உலகம் குறிப்பாக கனடா (ரொறொன்ரோ) கண்டுள்ளது. இதன் வெளிப்பாடே இந்த ஆதன விலை மாற்றத்திற்குக் காரணமாகலாம். தொழில்கள், தொழில்புரியும் முறைகள், வாழ்க்கை முறை எல்லாமே மாறிவிட்டன. 1963இல் 18 மில்லியனாக இருந்த கனடிய சனத்தொகை 2021இல் 38 மில்லியனாக அதிகரித்துள்ளது. 1980களின் பின்பு வெளிநாடுகளிலிருந்து பணம் படைத்தோர், தொழில் நோக்கம் கொண்டோர், சொந்த நாடுகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாகக் குடிபெயர்ந்தோர், கல்வி கற்பதற்காகக் குடியேறியவர்கள் போன்ற புதிய வரவாளர் களினால் கனடாவின் மக்கள்தொகை அதிகரித்துள்ளது. சனத்தொகை அதிகரித்தது மட்டுமன்றி கனடியர்களின் இன விகிதாசாரம் (ethnic ratio) மாறி வருவதனையும் காணலாம். கனடா ஒரு பல்காலாச்சார (multicultural) நாடாகவும் இருக்கிறது. இவ்வாறான நிலைமையை கனடாவில் மட்டுமல்ல அநேகமான முன்னேற்றமடைந்த நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது. இதுவே எதிர்காலத்தின் ஆரம்பம்.

2021இல் ரொறொன்ரோ பெரும் பாகத்தில் (GTA) ஒரு நபரின் சராசரி வருமானம் $30,713இலிருந்து $51,919வரை காணப்படுகிறது. வீட்டின் சராசரி விலை $1,095,565 ஆகவும் உள்ளது. இது ஒருவரின் சராசரி ஆண்டு வருமானத்தைவிட 21 மடங்கு ஆகும்.

இதுவே இன்றைய நிலைமை ரொறொன்ரோ போன்ற பெரிய நகரங்களிலும் அதனை சுற்றிய புறநகர் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் சாதாரண கனடியர்களால் ஆதனங்கள் வாங்குவது என்பது இலகுவல்ல. ஆதன விலை அதிகரித்தே செல்கின்றது. குடும்ப உறவினர்களின் உதவியின்றி முதற்தடவையாக ஆதனம் வாங்குவோரின் நிலமை இலகுவானதல்ல. இவர்கள் மிகவும் கடுமையாக உழைக்க வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர்.

| மார்ச் 2021 | |
|---|---|
| கனடிய வட்டி வீதம் | 0.25% |
| முதன்மை வட்டி வீதம் | 2.45% |
| கைமாறிய ஆதனங்கள் | 15,652 |
| ஆதனத்தின் சராசரி விலை | $1,097,565 |

இத்துடன் குறிப்பாக, கடந்த சில காலங்களில் கனடிய மக்கள் ஆதனங்களில் முதலிடுவது மற்றும் ஆதனங்களை வாங்கி திருத்த வேலைகள் செய்தபின் விற்றல் போன்றவற்றால் ஆதனம் வாங்குவது ஒரு வியாபாரமாகவே காணப்படுகிறது. இவை போன்ற நிலைப்பாடுகளும் ஆதன விலையில் அதீத அதிகரிப்பு ஏற்படுவதற்கு சில காரணங்களாகும். முக்கியமாக சனத்தொகையின் அதிகரிப்புக்கும், அவர்களின் தேவைகளிற்கேற்ப போதிய ஆதனங்கள் நிர்மாணிக்கப்படவில்லை (much lower supply than demand) என்பதே உண்மை. இந்நிலைமையை மாற்றுவதற்காக மூன்று அரசுகளும் ஒரு கோட்டில் வருவர் என எதிர்பார்ப்போம்.

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • TENNIS ELBOW PROBLEM
• SKIN PROBLEM • TREAT WITH MASSAGE THERAP
• RESPIRATORY PROBLEMS • ALLERGIES
• DIGESTIVE PROBLEMS • SEXUAL PROBLEMS
• VARICOSE VEINS • SEXUAL PROBLEMS
• BACK PROBLEM /NECK PROBLEM • CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM




Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.


HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsilitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER
TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2021 ஆட்சி அமைக்கப் போவது யார்?

ஆடி அடங்கிய அலை போல, தேர்தல் பிரச்சார பரபரப்புகள் முடிந்து, அமைதியாக இருக்கிறது தமிழ்நாடு. ஆனால், தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும்? வெற்றிபெறப் போவது யார்? ஆட்சி அமைக்கப் போவது யார்? என்பது வாக்கு சதவிகிதக் கணக்குகளில் தொடங்கி பற்பல கணக்குகள் வழி தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் அமைதியாக அலசப்பட்டுதான் வருகிறது. தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகம் முழுவதும் தமிழர் மத்தியிலும் இந்தக் கேள்விகள் உள்ளன. சரி, வெற்றி வாய்ப்பு யாருக்கு உள்ளது?

## எம்.ஜி.ஆர். ஆவாரா எடப்பாடி பழனிசாமி?

தமிழ்நாட்டை ஆட்சி செய்துள்ள காங்கிரஸ், திமுகவுடன் ஒப்பிடும்போது வயது குறைந்த கட்சிதான் அதிமுக. ஆனால், காங்கிரஸ், திமுகவைவிட அதிக காலம் தமிழகத்தை ஆண்ட கட்சி அதிமுகதான். தமிழ்நாட்டை 31 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறது, அதிமுக. அதன் தாய் கழகமான திமுக 21 ஆண்டுகள்தான் ஆட்சி செய்துள்ளது. அதிமுகவின் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா என்ற இரண்டு வெகுஜன கவர்ச்சியுள்ள தலைவர்கள். இந்த இரண்டு பெரும் தலைவர்களை முன்னிறுத்தி தேர்தலை எதிர்கொண்ட அதிமுக இம்முறை தமிழ்நாடு முழுவதும் அதிகம் பரிச்சயம் இல்லாத எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தியுள்ளது.

எடப்பாடி பழனிசாமிக்கு தேர்தல் புதிய தல்ல இம்முறை ஆறாவது முறையாக தேர்தலை எதிர்கொள்கிறார். ஆனால், அவருக்கு கடந்த 5 முறைகளில் இருந்து 2021 தேர்தல் மிக வித்தியாசமான தேர்தல். சேலம் புறநகர் மாவட்டச் செயலாளர் என்ற அடிப்படையிலும், சேலம் மாவட்ட அமைச்சர் என்ற அடிப்படையிலும்தான் இதுவரை அவர் சட்டமன்ற / நாடாளுமன்றத் தேர்தல்களை எதிர் கொண்டிருக்கிறார். கடந்த 2016ஆம் ஆண்டு தேர்தல்வரை, சேலம் மாவட்டத்தின் பெரும்பாலான தொகுதிகளைக் கைப்பற்றி அம்மாவின் காலடியில் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுதான் அவரது உச்சபட்ச அரசியல் நோக்கமாக இருந்திருக்கும். ஆனால், இந்த 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் எடப்பாடி பழனிசாமியின் கைகளில் புதிய பொறுப்புகளையும், அவரது தோள்களில் புதிய சுமைகளையும் ஏற்றி வைத்திருக்கிறது. முதலமைச்சராக இந்தத் தேர்தலை சந்தித்து அதிமுக ஆட்சியைத் தக்க வைக்க வேண்டிய பெரும் பொறுப்பை சுமந்திருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போன்ற ஒருவர் இல்லாதது அதிமுகவுக்கு பலவீனம் என்றாலும், எதிர்த்து போட்டியிட்ட திமுகவிலும் கருணாநிதி போன்ற ஒரு தலைவர் இல்லாதது அதிமுகவுக்குப் பலமாகி, அதனை சரிகட்டி விடும். மேலும், இப்போதும் தமிழ்நாட்டில் அதிக ஆதரவாளர்களைக் கொண்ட கட்சி அதிமுகதான். கூட்டணிகள் இல்லாமல் அனைத்து கட்சிகளும் தனித்தனியாக தேர்தலை எதிர்கொண்டால், வெற்றிபெறும் வாய்ப்பு அதிமுகவுக்கே அதிகம் என்பதை மறுக்க முடியாது. 2014 நாடாளுமன்ற தேர்தலிலும் 2016 சட்டமன்ற தேர்தலிலும் அதனை ஜெயலலிதா நிரூபித்து காட்டியுள்ளார்.



ஆனால், இம்முறை கூட்டணிதான் அதிமுகவுக்கு பெரும் எதிரியாக அமைந்து போனது. 2004 நாடாளுமன்ற தேர்தலில் முதன்முறையாக பாஜகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தது, அதிமுக. அந்த தேர்தலில் அனைத்து தொகுதி களிலும் தோல்வியை தழுவியது. பாஜக கூட்டணி காரணமாக கிறிஸ்தவர், இஸ்லாமியர் வாக்குகள் விலகிப் போவதை உணர்ந்த, ஜெயலலிதா, இனி எப்போதும் பாஜகவுடன் கூட்டு அமைப்பதில்லை என்று முடிவு செய்தார். அதை பிரச்சாரங்களில் பகிரங்கமாக அறிவிக்கவும் செய்தார்.

இனி எக்காலத்திலும் எந்தக் கட்சியுடனும் கூட்டணி இல்லை என்று ஜெயலலிதா பகிரங்கமாக அறிவித்தாரோ அந்தப் பாஜகவுடன் கூட்டணி அமைத்து இம்முறை தேர்தலை சந்தித்துள்ளார், எடப்பாடி பழனிசாமி. இதனால், அதிமுகவுக்கு வர வாய்ப்புள்ள கிறிஸ்தவர், இஸ்லாமியர் வாக்குகளை மட்டுமல்லா மல், மோடி எதிர்ப்பலை காரணமாக வழக்கமான அதிமுக வாக்குகளையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து அதிமுகவுக்கு வாக்களித்து வந்தவர்களுக்கு எம்ஜிஆர், ஜெயலலிதா இருந்த இடத்தில் எடப்பாடி பழனிசாமி, ஓ. பன்னீர்செல்வம் இருவரையும் வைத்து பார்க்க இஷ்டம் இல்லை. இவர்கள் தங்கள் சுயநலத்திற்காகக் கட்சியினுடைய அடையாளத்தை மோடியிடம் அடமானம் வைத்து அவமானப் படுத்தி விட்டதாகவே அதிமுகவினர் பொருமுகின்றனர். ஆனால் அதேசமயம் அதிமுகவை விட்டு வேறு கட்சிக்கு வாக்களிக்கவும் அவர்கள் மனம் ஒப்பவில்லை. இதன் பொருட்டு அதிமுகவின் நிரந்தர வாக்காளர்களில் சிலர் வாக்களிக்கும் இடத்திற்கே செல்லவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தேர்தலில் பாஜக கட்சியினரே தங்கள் பிரச்சாரங்களில் மோடி படங்களை தவிர்க்கும் அளவுக்கு தமிழ்நாட்டில் மோடி எதிர்ப்பலை இருந்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசு வேலைகளில் வட மாநிலத்தவர்கள் திணிப்பு, மீண்டும் இந்தி மொழி திணிப்பு போன்ற பல்வேறு காரணிகளால் மோடி எதிர்ப்பு தீ தமிழ்நாட்டில் கொழுந்துவிட்டு எறிகிறது. இதனை அதிமுக வேட்பாளர்களும் உணர்ந்தே இருக்கின்றனர், இதனால் பாஜக தலைவர்கள் கலந்துகொண்ட பலபிரச்சார பொதுக் கூட்டங்களை அதிமுக வேட்பாளர்கள் தவிர்த்தனர். மேலும், இதனை சரிகட்ட அனைத்து தொகுதி களிலும் ஒரு வாக்குக்கு திமுகவினர் வழங்கியதை விட அதிக பணத்தை வாரி வழங்கியுள்ளனர்.

வட மாவட்டங்களில் பாமக கூட்டணியும், கடைசி நேரத்தில் வன்னியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு அமல்படுத்தியதும் எடப்பாடி பழனிசாமிக்குக் கை கொடுக்கலாம். இன்னொரு பக்கம், அதனாலேயே தென் மாவட்டங்களில் அதிமுகவுக்கு அடி பலமாக இருக்கும் என்கின்றனர். வன்னியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 10.5 சதவிகிதம் உள் ஒதுக்கீட்டால் தேவர் சமூகம் நேரடியாகப் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்ற பிரசாரம், தென் மாவட்ட அதிமுகவின் மிகப்பெரிய வாக்கு வங்கியான தேவர் சாதியினர் வாக்குகளில் பெரிய சேதாரத்தை ஏற்படுத்தலாம்.

முக்கியமாக தேவர் சாதியினர் வாக்குகளில் பெரும்பகுதியை இம்முறை டிடிவி தினகரனின் அமமுக பிரித்து சென்றுவிடக் கூடும். எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின்னர் ஜானகி _ ஜெயலலிதா என அதிமுக வாக்குகள் பிரிந்தது போல், இம்முறை தென்மாவட்டங்களில் அமமுக பிரிக்கும் என்றும் கணிக்கப்படுகிறது. டெல்டா, மற்றும் மத்திய மாவட்டங்களிலும் அதிமுக வாக்கிகளில் ஒரு பகுதியை அமமுக பிரிக்கலாம்.

ஆனால் வாக்குப் பதிவுக்குப் பின்னர் நெருக்கமானவர்களிடம் பேசிய, தேவர் சமூகத்தை சேர்ந்த ஓ. பன்னீர்செல்வமோ, "தென் மாவட்டத்தில் தினகரன் சின்னத்துக்கு பெரிய அளவு ஓட்டு விழலை. தொகுதிக்கு ஆயிரத்தில் இருந்து 2 ஆயிரம் ஓட்டுதான் அவர் வாங்கியிருக்க முடியும். வெற்றி வித்தியாசத்தை வேண்டுமானால் அவர்கள் கொஞ்சம் குறைக்கலாமே தவிர நமது வெற்றியைப் பாதிக்க முடியாது" என்று உறுதியாக சொல்லியுள்ளாராம்.

அதிமுகவின் தேர்தல் உத்தி வகுப்பாளராக செயல்பட்ட சுனிலும் அதிமுகவுக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் பற்றி எடப்பாடி பழனிசாமிக்கு நம்பிக்கை ஊட்டும் அறிக்கை கொடுத்துள்ளதாகவும் தகவல்கள் கசிகின்றன. வாக்குப் பதிவு தினத்தன்று அதிமுகவுக்காக, வாக்குப் பதிவுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பை செய்திருக்கின்றனர் சுனில் குழுவினர். அதன் அடிப்படையில் எடப்பாடி பழனிசாமியிடம் பேசிய சுனில், 'நாம் நடத்திய ஆய்வின்படி அதிமுகவுக்கு 105 இடங்கள் மிக உறுதியாகக் கிடைத்துவிடும். சுமார் 20 இடங்களில் நமக்கும் திமுகவுக்கும் இப்படியா அப்படியா என கடுமையான போட்டி இருக்கிறது. ஆனால், அந்தக் குறிப்பிட்ட தொகுதிகளில் நாம் கடைசி நேரத்தில் செய்த வேலைகள் முழுதாக நடந்திருக்கிறது. அதனால் அதில் 15 தொகுதிகள் நமக்கு உறுதியாக வருகிறதுக்குத்தான் அதிக வாய்ப்பிருக்கும்' என்று சொல்லியதாகக் கூறப்படுகிறது.

பெண்கள், முதல் முறை வாக்களிக்கும் இளம் வாக்காளர்களின் வாக்குகள் ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றியை தீர்மானிப்பதில் முக்கியத்துவமானவை. இந்த தேர்தலில் முதல் முறை வாக்களித்தவர்களில் நகரப் பகுதிகளில் பெரும்பான்மையினர் கமல்ஹாசனுக்கும், கிராமப் பகுதிகளில் பெரும்பான்மையினர் சீமானுக்கும் ஆதரவாக வாக்களித்திருக்கலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆக அந்த ஓட்டுகள் திமுகவுக்கு பெரும்பாலும் போகவில்லை என்றும் அதிமுக தரப்பில் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். குறிப்பாக திருவொற்றியூரில் நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் 40 ஆயிரம் வாக்குகள் பெறுவார் என்று கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. அதில் சுமார் பத்தாயிரம் வாக்குகள் திமுகவுக்குப் போக வேண்டிய வாக்குகள்தான். எனவே கமல்ஹாசன், சீமானால் பாதிப்பு திமுகவுக்குத்தான். தமிழ்நாட்டில் இயல்பாகவே பெண்கள் அதிமுக வாக்காளர்கள்தான். எனவே, பெண்கள், முதல் முறை வாக்களிக்கும் இளம் வாக்காளர்களின் வாக்குகள் வகையிலும் வெற்றி விகிதம் அதிமுகவுக்குத்தான் அதிகமாக இருக்கிறது என்று அதிமுக தரப்பில் கூறப்படுகிறது.

இம்முறை வெற்றிபெற்றால் மூன்று முறை தொடர்ந்து வென்ற எம்.ஜி.ஆரின் சாதனையை சரி செய்யும் அதிமுக. எம்.ஜி.ஆர். ஆவாரா எடப்பாடி பழனிசாமி? அதிமுக படகு, மோடி எதிர்ப்பலையில் கவிழுமா, வேட்பாளர்கள் விதைத்துள்ள பணத்தால் எதிர்ப்பலையை சமாளிக்குமா? மே 2ஆம் திகதி தெரிந்து விடும்.

## கருணாநிதி கனவை நிறைவேற்றுவாரா ஸ்டாலின்?

திமுக கூட்டணியின் தலைவரும், திமுக முதலமைச்சர் வேட்பாளருமான மு.க. ஸ்டாலின் 200க்கும் மேற்பட்ட இடங்களில் தங்கள் கூட்டணி வெற்றிபெறும் என்றே தொடர்ந்து சொல்லி வந்தார். தேர்தல் நாளான ஏப்ரல் 6ஆம் திகதி காலை வாக்குப் பதிவு தொடங்கிய சில மணி நேரங்களிலேயே ஸ்டாலின் சென்னை தேனாம்பேட்டையில் இருக்கும், திமுக தேர்தல் உத்தி வகுப்பாளர்களான ஐபேக் அலுவலகத்துக்குச் சென்றார். அங்கே ஐபேக் நிறுவனர் பிரசாந்த் கிஷோர், ஸ்டாலினின் மருமகன் சபரீசன் மற்றும் தேர்தல் களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த ஐபேக் முக்கிய அலுவலர்கள், ஊழியர்களும் இருந்தனர்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

அவற்றின் முக்கியத்துவமும் சமூகத்தினரால் உணரப்பட்டது.

இலங்கையில் தேசிய பாடசாலைகள் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டுகளின் பின்னர் இந்த நிபந்தனைகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் அவற்றிற்கான இறுக்கமான கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. இதன்மூலம் அதிகளவிலான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகத் தெரிவுசெய்யப் பட்டன. ஆரம்பத்தில் அரசியல் செல்வாக்குகளின் அழுத்தங்கள் காரணமாகவும் நாடெங்கிலும் இவ்வாறான பெயர்மாற்றப் பாடசாலைகள் தோற்றம்பெற்றன.

நிபந்தனைகள் ஆரம்பத்தில் கடுமையாகப் பின்பற்றப்பட்டதால், பெருமளவு பாடசாலைகள் தேசியப் பாடசாலை என்ற நீரோட்டத்திற்குள் உள்வாங்கப்படவில்லை. இவ்வாறு தேசிய பாடசாலைகளாகத் தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளை ஒரு “மாதிரிப் பாடசாலையாக” (Model School) உருவாக்கி அதனை வழிகாட்டியாகக் கொண்டு ஏனைய மாகாணப் பாடசாலைகளையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதே அன்றைய தேசிய பாடசாலைக் கொள்கையின் இலக்காக இருந்தது. அதனால் மத்திய அரசு இவ்வகையான பாடசாலைகளின் அபிவிருத்தியில் நேரடியாகவே பின்வரும் விடயங்களில் தலையீடுகளை மேற்கொண்டதுடன் மாகாணப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் அதிகளவில் கவனம் செலுத்தவில்லை. அதேவேளை இப்பாடசாலைகள் மாகாண நிர்வாகத்தில் இருந்தும் விலக்கி வைக்கப்பட்டதால், அவற்றைக் கண்காணித்து நெறிப்படுத்தும் பொறுப்பில் இருந்தும் மாகாணக் கல்வித் திணைக்களங்களும் விலகிக் கொண்டன.

தேசிய பாடசாலைகளுக்கு மத்திய அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் வசதிகளும் வாய்ப்புக்களும் பின்வருமாறு:

1.போதிய நிதி வசதிகளை வழங்குதல்

2.தேவைக்கேற்ப அதிபர், ஆசிரியர்களை நியமிப்பதுடன், அவர்களின் இடமாற்றம், சம்பள உயர்வுகள், பதவி உயர்வுகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

3.போதிய அளவுக்குக் கட்டிட வசதிகள், தளபாடங்கள், ஆய்வுகூட வசதிகள் மற்றும் உபகரணங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

ஆனால் இவை காலப்போக்கில் ஏற்கனவே அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் அமைந்திருக்கவில்லை. அதேவேளை மாகாணப் பாடசாலைகளைப் பலவீனப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளே மத்திய அரசினால் முன்னெடுக்கப்பட்டன. இதனால் மாகாணப் பாடசாலைகளில்-



1.மாணவர் தொகை வீழ்ச்சி அடையத் தொடங்கியது. ஏனெனில் தேசியப் பாடசாலைகளில் வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதால், கவர்ச்சியின் காரணமாகப் பெருமளவு மாணவர்கள் தேசியப் பாடசாலைகளில் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றித் தாராளமாக அனுமதி பெறக்கூடியதாக இருந்தது. இதனால், கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்கள் சேரும் வீதம் வீழ்ச்சியடைந்ததுடன் இருக்கின்ற மாணவர்களும் விலகிச் செல்லத் தொடங்கினர். அதேவேளை தரம் 1இலும் மாணவர்கள் சேரும் வீதமும் குறைவடைந்தும் வருவதால், ஸ்ரீலங்காவில் 1,468 மாகாணப் பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாகக் கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. அவற்றுள் வடமாகாணத்தில் மட்டும் சுமார் 200இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்படும் நிலையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

2.தேசிய பாடசாலைகளுக்குத் தேவைக்கு அதிகமாக நிதிகளை வழங்குவதுடன், உட்கட்டமைப்பு வசதிகளும் அதிகரிக்கப்பட்டன.

3.போதியளவுக்குத் தகைமை பெற்ற ஆசிரியர்களையும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், கல்வியியல் கல்லூரிகளிலும் சிறப்புத் தேர்ச்சி (Merit Pass) பெற்ற ஆசிரியர் பயிலுனர்களை இனங்கண்டு அவர்களை முன்னுரிமை அடிப்படையில் தேசிய பாடசாலைகளுக்கே நியமித்தல்.

4. அதேவேளை 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற மாணவர்களை எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி தேசியப் பாடசாலைகளில் அனுமதித்தல்.

இவை போன்ற செயற்பாடுகளின் காரணமாக மாகாணப் பாடசாலைகளின் முக்கியத்துவம் குறைந்து வரும் நிலையில் அரசு அதிகளவில் தேசிய பாடசாலைகளை உருவாக்கும் அதேவேளையில், அரசின் இன்னுமொரு கொள்கையாக விளங்கும் “அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” (Nearest School Is The Best School) என்ற கோசமும், செயற்பாடும் தோல்வியைத் தழுவிக் கொண்டு வருகின்றமையை நடைமுறையில் பார்க்க முடிகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு அருகில் உள்ள பாடசாலைகளே சிறந்த பாடசாலையாக வளர்த்தெடுக்கப் படவுள்ளதால், மாணவர்கள் தமக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் சேர்ந்து கல்வியைக் கற்க வேண்டும் என்ற இரு வேறுபட்ட முரண்பாடான கல்விக் கொள்கைளை மத்திய கல்வி அமைச்சுக் கொண்டுள்ளமையானது, கிராமப்புறப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குத் தடையாகவே இருக்கின்றது.

ஆயினும் அரசு எவ்வளவு தான் தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அவற்றிற்குப் போதிய வளங்களைக் கொடுத்து ஊட்டிக் கொண்டிருந்தாலும், கிராமப்புற பாடசாலைகள் பலவற்றின் பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள் தேசியப் பாடசாலைகளின் பெறுபேறுகளைவிட இன்றும் உயர்வாகவே இருந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை ஏற்கனவே தேசியப் பாடசாலைகளின் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டது போன்று, “வினைதிறன்மிக்க” பாடசாலைக்குரிய பண்புகளையும் அவை இழந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையில் தற்போதைய அரசாங்கம், புதிய கல்வி மறுசீரமைப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவரும் வேளையில், தேசியப் பாடசாலைகளைத் தெரிவுசெய்வதற்காக ஆரம்பத்தில் விதிக்கப்பட்ட பிரமாணங்களைத் தளர்த்தி (Criteria) எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றியே எந்த ஒரு பாடசாலையும் தேசிய பாடசாலையாகத் தம்மை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்படும் என்ற அறிவிப்புக்கு அமைய மேலும் புதிதாக 1002 தேசிய பாடசாலைகளை நிறுவும் அரசின் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இப்புதிய தேசிய பாடசாலைகளுக்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கமைய 2021ஆம் ஆண்டில் மேலும் 626 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அரசின் புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, மாகாணப் பாடசாலைகளின் பலத்தைக் குறைப்பதுடன் காலப்போக்கில் மேலும் பல மாகாணப் பாடசாலைகள் மூடப்படும் நிலையையும் ஏற்படுத்தும் என்பதைக் கல்விச் சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரசின் இத்தகைய தூரநோக்கற்ற கல்விக் கொள்கைகள் காரணமாக மாகாணப் பாடசாலைகளைக் காலப் போக்கில் செயலிழக்கச் செய்து, இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்குரியதாக இருந்த கல்வி போன்ற அதிகாரங்களைக் குறைத்து, மத்திய அரசாங்கத்தின் கீழேயே மீண்டும் கல்வியைக் கொண்டுவருவதற்கான திட்டமிட்ட ஏற்பாடாகவே இவை அமைந்துள்ளன.

இந்த நிலையில் நாட்டில் உள்ள 10,265 பாடசாலைகளையும் சமமான வளங்களை வழங்கி அவற்றை வினைதிறன் மிக்க பாடசாலைகளாக வலுவூட்டுவதை விட்டு தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதா அல்லது மாகாணப் பாடசாலைகளின் தரத்தை வலுவூட்டுவதா என்பதைப்பற்றி மத்திய அரசாங்கம்தான் சிந்தித்து செயற்படவேண்டும்!

விளம்பரம்
VLAMBARAM
31 ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com

Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved




## கலக்கம்



பிறந்தது முதலாய், இறப்பது வரையில்
சிலபேருக்கு எதிலும் கலக்கம்
கலக்கத்தோடு காரியமாற்றின்
தவறுகள் அதிகம் வருவது வழக்கம்
இழப்புகளுக்குக் கலக்கம் கொண்டால்
இழந்தவை எப்படி திரும்பக் கிடைக்கும்
கலக்கம் கொண்ட மனதில் என்றும்
நிறைந்திருக்கும் நிறைய குழப்பம்
அறிவும், தெளிவும், துணிவுமிருந்தால்
அகத்தில் என்றும் வேண்டாம் கலக்கம்
தன்னம்பிக்கை இருப்பவர் மனதில்
தயக்கம் கூட வந்திடத் தயங்கும்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடின்பரோ ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பிலிப் மன உறுதி, விசுவாசம், தூர நோக்கு என்பவற்றை கொண்டவர். மற்றும் அன்பான கணவர், தந்தை, தாத்தா, கொள்ளுப் பேரன் ஆவார். மற்றவர்களுக்குச் சேவையாற்றும் பெரும் மனிதர். முதலில் ஒரு மிகச்சிறந்த கடற்படை அதிகாரி, பின்னர் ஒரு சமூக ஈடுபாடு கொண்ட ஒரு தலைவர். அவர் மக்களின் சிறப்புகளை அடையாளம் கண்டு அதில் அவர்கள் உயரத்தைத் தொட வழிவகுத்தவர்” என்றார்.



The Queen's 90th birthday on June 12, 2016 in London, England

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெளியிட்ட அறிக்கையில் “இளவரசர் பிலிப் தனது வாழ்நாளிலேயே நமது உலகத்தில் வியத்தகு மாற்றங்கள் ஏற்படுவதைக் கண்டவர். அவர் பொதுச் சேவைக்குப் பல தசாப்தகால அர்ப்பணிப்புகளைச் செய்தவர். அவர் பல சுற்றுச்சூழல் முன்னேற்ற முயற்சிகளில் வெற்றி பெற்றவர். அவர் ஆதரித்த ஆயுதப்படை வீரர்களிடத்திலும், அவரால் ஊக்கம் அளிக்கப்பட்ட சிறுவர்களிடமும் அவர் கொடுத்த நம்பிக்கையையும் தைரியத்தையும் அவர்களின் வளர்ச்சியில் காணலாம்” என்றார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது அறிக்கையில் இளவரசர் பிலிப்பின் கடற்படைக்கான சேவைகளை நினைவு கூர்ந்தார். அத்துடன் இளவரசர் முன்னின்று நடத்திய பல சமூகசேவை முயற்சிகளையும் நினைவுகூர்ந்தார்.

இலங்கை அதிபர் கோத்தபாய ராஜபக்ச இங்கிலாந்தின் அரச குடும்பத்திற்குத் தனது அனுதாபத்தைத் தெரிவித்து வெளியிட்ட Twitter செய்தியில் இளவரசர் பிலிப் செய்து வந்த சமூக சேவைகள் என்றென்றும் எங்கள் நினைவில் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் றொனால்ட் ரம்ப் உம் அவரது பாரியார் மெலனியாவும் இளவரசர் பிலிப்பின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் அவர் இங்கிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் மதிப்பு மிக்க உயர்ந்த தலைவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

1921 ஜூன் 10ஆம் நாள் கிரேக்க மற்றும் டென்மார்க் (Greek and Danish) அரச பரம்பரையில் Greece நாட்டில் பிலிப் பிறந்தார். அவர் 18 மாதக் குழந்தையாக இருக்கும்போதே அங்கிருந்து வெளியேற்றப்பட்டு குடும்பத்துடன் பிரான்சில் வாழ்ந்தார். அவருக்கு நான்கு மூத்த சகோதரிகள். பிலிப்பின் தாய்வழிப் பேரன் இங்கிலாந்தின் அரச குடும்பத்தவர்.

பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்தில் கல்வி கற்ற பின் இங்கிலாந்தின் கடற்படையில் பிலிப் 1939இல் சேர்ந்தார். அவர் இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்தின் கடற்படைச் சேவையில் இருந்தார். பிலிப் 1947இல் தனது கிரீஸ் மற்றும் டென்மார்க் அரச பரம்பரைப் பட்டங்களைத் துறந்து இங்கிலாந்துக் குடிமகனாகித் தனது தாய்வழிப் பேரனின் பெயரை (Mountbatten) தனது பெயரில் சேர்த்துக் கொண்டார்.

1947இல் தனது தூரத்து உறவினரான இளவரசி எலிசபெத்தைத் திருமணம் செய்து எடின்பரோ கோமகன் ஆனார். 1952இல் இங்கிலாந்து அரசர் King George VI காலமாகி, இளவரசி இராணி எலிசபெத் இரண்டாம் எலிசபெத் ஆகியபோது, இளவரசர் பிலிப் தனது கடற்படைப் பதவியிலிருந்து விலகினார். இளவரசர் பிலிப்பிற்கும் இராணி இரண்டாம் எலிசபெத்திற்கும் மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைகள் உள்ளனர். இவர்களுக்குத் தற்போது 8 பேரப்பிள்ளைகளும் 10 பூட்டப் பிள்ளைகளும் இருக்கின்றனர்.

இளவரசர் பிலிப், இராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடிய பின்னர் அவரின் அரச வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்ததுடன் பல தனிப்பட்ட முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்தார்.



இளவரசர் பிலிப், 992 தொண்டு நிறுவனங்களுக்குத் தலைவர் (president) அல்லது பாதுகாவலர் (Patron) அல்லது சிறப்பு உறுப்பினராக (honorary member) இருந்தவர். 2017 ஒகஸ்ற் 2ஆம் நாள் இளவரசர் பிலிப் இந்தத் தொண்டு நிறுவனங்களின் பதவிகளில் இருந்து இளைப்பாறினார். அதாவது 96 வயதுவரை இளவரசர் பிலிப் இந்தத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இங்கிலாந்து மக்களுக்கும் பொதுநலவாய நாடுகளின் மக்களுக்கும் அளப்பரிய சேவைகளைச் செய்து வந்துள்ளார்.

இராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடிய 1952ஆம் ஆண்டிலிருந்து 96வது வயதில் இளைப்பாறும் வரை இராணியுடன் பங்கு பற்றிய நிகழ்வுகளைத் தவிர தனது சொந்த நிகழ்வுகளாக 22,219 நிகழ்வுகளில் கலந்துள்ளார் அத்துடன் 5,493 சொற்பொழிவுகளையும் செய்துள்ளார்.

இளவரசர் பிலிப் இளையோரின் தலைமைத்துவ வளர்ச்சிக்கு உதவும் முகமாக உருவாக்கிய ‘The Duke of Edinburgh's Award’ அமைப்பால் பொது நலவாய நாடுகளைச் சேர்ந்த சிறுவர்கள் விளையாட்டு மற்றும் தலைமைத்துவப் பண்புகளைப் பெற்றுத் தேர்ச்சியடைந்துள்ளனர். 144 நாடுகளில் இந்த அமைப்பு செயல்படுகிறது. இதில் 14 வயது தொடக்கம் 24 வயது வரையிலான இளையோர் பங்கு பற்றிப் பயனடையலாம். இளவரசர் பிலிப் இளைப்பாறும் மட்டும் இந்த 144 நாடுகளில் இருந்து 8 மில்லியன் இளையோர் இந்த அமைப்பால் பயனடைந்துள்ளனர்.

இளவரசர் பிலிப்பினுடைய சுற்றுப்புறச் சூழல் முன்னேற்ற நடவடிக்கைகள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவை. வன விலங்குப் பாதுகாப்பு (Wildlife Conservation) மற்றும் பல்லுயிர் முயற்சிகள் (Biodiversity Initiatives) மூலம் வருங்காலச் சந்ததியினருக்குத் தோட்டங்களைப் பராமரித்துப் பாதுகாப்பாகக் கையளிக்கத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பாதுகாப்பாளர்கள் (conservationists) உடன் இளவரசர் பிலிப் பணியாற்றினார்.




World Wildlife Fund (WWF) என்னும் வனவிலங்குப் பாதுகாப்புத் தொண்டு நிறுவனத்துடன் சேர்ந்து 50 ஆண்டுகளிற்கு மேல் பணியாற்றிய பிலிப் அதன் சர்வதேச நிறுவனத்தின் தலைவராக 1981இல் இருந்து 1996ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். 1970இல் WWF நிறுவனம் மிகச் சிறந்த பாதுகாப்பாளருக்கான விருது ஒன்றை Duke of Edinburgh conservation Award என அறிவித்து, அதை உலகளாவிய ரீதியில் சுற்றுப்புறச் சூழலில் சிறந்த முயற்சியை செய்தவருக்கு வழங்கி வருகிறது.

# Percy செவ்வாயில் என்ன செய்கிறது?

அமெரிக்க விஞ்ஞானிகள் செவ்வாயில் Percy என்று செல்லமாக அழைக்கப்படும் Perseverance தானியங்கி இயந்திரத்தை 2021 பெப்ரவரி 18இல் தரையிறக்கி இருந்தனர் என மார்ச் முதலாம் திகதி விளம்பரப் பத்திரிகையில் வாசித்திருப்பீர்கள்.

ஒரு காரின் வடிவமைப்பைக் கொண்ட Percy, 6 சில்லுகளுடனும், 19 படம் எடுக்கும் கருவிகளுடனும், இரண்டு ஒலி வாங்கிகளுடனும் அங்கு தரையிறக்கப் பட்டது. Percy தற்போது செவ்வாயில் என்ன செய்து கொண்டிருக்கிறது எனப் பார்ப்போம்.

முதலில் செவ்வாய் நாள் எனப்படும் sol இற்கும் பூமியின் ஒரு நாளுக்கும் இடையேயான தொடர்பைப் பார்ப்போம். பூமியின் ஒரு நாள் 24 மணித்தியாலங்கள் என்பது உங்களுக்குத் தெரியும். செவ்வாயில் ஒரு நாள் 24 மணித்தியாலங்கள் 39 நிமிடம் 35 செக்கன் ஆகும். அதாவது செவ்வாயில் ஒரு நாள் பூமியின் ஒரு நாளை விட 40 நிமிடம் கூடியது.



